அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.185/2015
தேதி. 07.08.2015

# பா.இராமச்சந்திர ஆதித்தனார் பெயரில் புதிய சாலை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவிஅவர்களுக்கு ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ நன்றி

மாலைமுரசு நிர்வாக ஆசிரியராகத் திகழ்ந்த அமரர் பா.இராமச்சந்திர ஆதித்தனார் அவர்களின் பெயரை, அடையாறு காந்திநகர் 4 வது பிரதான சாலைக்கு சூட்டுவதற்கு அறிவுறுத்தியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிக்கைப் பணிகளோடு முத்தமிழ்ப் பேரவையின் தலைவராக செயல்பட்டு வந்த அவர், ஆண்டுதோறும் முத்தமிழ் விழா நடத்தி தமிழ் அறிஞர்களுக்கு விருதுகளும் பொற்கிழியும் வழங்கி வந்தார்.

## புரட்சித் தலைவி

பா.இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் தமிழகத்தின் முக்கிய நிறுவனமான தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியை மீட்பதற்காக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உதவியை நாடினார். அப்போது உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டு, அப்போதைய பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் பேசி, மீட்புக்குழுவினரை உடன் அழைத்துச் சென்று, தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியை மீட்பதற்கு வழிவகுத்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த அளவிற்கு மண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்.

காந்திநகர் 4 வது பிரதான சாலையில் உள்ள கிரசண்ட்பார்க் சாலையில் தான் அவர் வாழ்ந்த வீடு உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமரர் பா.இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் வாழ்ந்த பகுதியில் உள்ள காந்திநகர் 4 வது பிரதான சாலைக்கு அவர் பெயரை சூட்டியது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் நன்றியையும் பாராட்டுக்களையும் என்சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்